ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | மார்ச் 2000 | கானம் : 8

ஸ்ரீ ஹரி:

**பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்**

## *சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா*

ப்ரேமிக பவனம், 24, நேதாஜி நகர்,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

''கலேர் தோஷநிதே ராஜன் அஸ்தி ஹ்யேகோ மஹான் குண:
கீர்த்தநாதேவ க்ருஷ்ணஸ்ய முக்த ஸங்க: பரம் வ்ரஜேத்''

# *பகவந்நாம ஸங்கீர்த்தன மேளா*

*(நாம ஸப்தாஹம்)*

நிகழும் ப்ரமாதி வருஷம், மாசி மாதம், 22-ந் தேதி முதல் மாசி 28-ந் தேதி வரை (05-03-2000 முதல் 11-03-2000 வரை) சென்னை, மயிலாப்பூர், ரஸிக ரஞ்சனி ஸபாவில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''**

அகண்ட நாமஸங்கீர்த்தனம், பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் முன்னிலையில் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபையால் நடத்த உத்தேஸிக்கப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனம்தான் அனைவருக்கும் கதியாக இருப்பதால், இதில் அனைவரும் கலந்துகொண்டு ஸர்வ நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## *நிகழ்ச்சி நிரல்*

**தேதி : 05-03-2000 முதல் 11.03-2000 வரை**

**தினமும் :**

காலை 6 மணி முதல் : **நாம ஸங்கீர்த்தனம்**
மாலை 6 மணிவரை

இரவு 7 மணி முதல் : **உபந்யாஸம்**
இரவு 9 மணி வரை

**11-03-2000 அன்று இரவு 9 மணி முதல் இரவு 11 மணி வரை**

**திவ்யநாம ஸங்கீர்த்தனம்**

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


| வேணு : 5 | மார்ச் 2000 | கானம் : 8 |
|---|---|---|


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 52 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 34 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 22 | 9 |
| 6. | திருத்தெற்றியம்பலம் ஸ்ரீ பள்ளி கொண்ட பெருமாள் திவ்யதேசம் - மஹா ஸம்ப்ரோக்ஷணம் | 16 |
| 7. | ஜோதிஷம் | 19 |
| 8. | மஹாபாரத கதைகள் | 22 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 28 | 25 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 55 | 28 |
| 11. | செய்திகள் | 32 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

பல்லவி

**துளஸீதேவி நமோऽஸ்துதே (துளஸீ)**

அ.பல்லவி

**துரிததுக்க நிவாரிணி**
**ஹரிபக்தஜனபாலினி**
**தாரித்ர்ய விநாஶிநி**
**பரிமளஸுகந்த ஸௌபாக்யதேவி (துளஸீ)**

சரணம்

**ஸர்வாபரண பூஷித ஸுந்தரி**
**ஸர்வ உபத்ரவ நாஶிநி மங்களரூபிணி**
**ஸஜ்ஜன பூஜித ஶீதளரூபிணி**
**ஸாது முரளீதரபரிபாலினி (துளஸீ)**

To know more about mission activities and satsang events visit : http://members.tripod.com http://www. madhuramurali.org madhuramurali

The Spiritual Magazine "Madhura Murali" is also available on Web : http://www.madhuramurali.org

ஹரியின் நாமத்தை வாயினால் உச்சரிக்கவும் காதால் கேட்கவும் வேண்டும். சில வியாதிகளுக்கு வெளியே மருந்து தடவுவதோடு உள்ளுக்கும் மருந்து கொடுப்பது அவசியம்.

-ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்

சென்ற வருடம், ஸ்ரீ மஹாபெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு, பெங்களூரில் மல்லேஶ்வரம் ஸ்ரீ ஶங்கரமடத்தில் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஸதக்ரது நடைபெற்றது. அந்த வருடம் நடந்த ஸப்தாஹ ஸதக்ரது, தர்சனம் செய்தவர்கள் எல்லாரும் ஆச்சரியப்படும்படி, மிகவும் பகவானுக்கு ப்ரீதிகரமான முறையில் நடைபெற்றது. நம் ஸ்வாமிகளுக்கு அந்த ஸப்தாஹ ஸதக்ரதுவை முதலில் குருவாயூரில் நடத்த ஆசை. ஆனால், குறுகிய காலத்திற்குள் ஏற்பாடுகள் செய்யமுடியாததால், மல்லேஶ்வரம் ஶங்கரமடத்தில் நடைபெற்றது.

திருப்பதி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு தனத்தினால் ஆராதனை செய்வதே ப்ரீதிகரமானது ஆகும். பத்ரிகாஶ்ரமத்தில் உள்ள பத்ரிநாராயணனை ப்ரஹ்மசர்யத்தினால் ஆராதனை செய்வதே ப்ரீதிகரமானதாகும். திருச்சூர் வடக்குநாதஸ்வாமிக்கு வேட்டு போட்டு வழிபடுவதே ப்ரீதிகரமானதாகும். பண்டரீபுரத்தில் உள்ள பாண்டுரங்கனை நாமகீர்த்தனத்தால் ஆராதனை செய்வதே ப்ரீதிகரமானதாகும். அதுபோல், குருவாயூரில் உள்ள குருவாயூரப்பன், பாகவத ஸப்தாஹத்தினால் ப்ரீதி அடைவது போல் வேறு எதனாலும் ப்ரீதி அடைவதில்லை.

குருவாயூரே, வாயுவாலும், ப்ருஹஸ்பதியாலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட மஹாக்ஷேத்ரம். குருவாயூரப்பனோ ப்ரத்யேகமாக அனுக்ரஹிக்கக்கூடிய மோஹனமூர்த்தி. அந்த க்ஷேத்ரத்தில் ஒரு பாகவத ஸப்தாஹமே அதிவிசேஷமானது. அத்தகைய க்ஷேத்ரத்தில் குருவாயூரப்பனை அஷ்டோத்தர ஸப்தாஹத்தினால் அர்ச்சனை செய்ய நம் ஸ்வாமிகள் ஆசைப்பட்டார்கள். அதாவது குருவாயூர் க்ஷேத்ரத்தில் **ஸப்தாஹ ஸதக்ரது** நடத்தவேண்டும் என்ற தம் ஆசையை பெங்களூர் பக்தர் ஸ்ரீமான் மூர்த்தி அவர்களிடம் ஸ்ரீ ஸ்வாமிகள் தெரியப்படுத்தினார்கள்.

ஸ்ரீமான் மூர்த்தியும் மிகவும் ஸந்தோஷப்பட்டு குருவாயூர் ஸப்தாஹ ஸதக்ரது என்ற கமிட்டியை ஏற்படுத்தி அதன்படி மே மாதம்

11-ஆம் தேதி முதல் 17-ஆம் தேதி வரை ஸப்தாஹ ஸதக்ரது, குருவாயூர் க்ஷேத்ரத்தில் குருவாயூரப்பன் ஆலயத்தின் நுழைவாயிலில் உள்ள மேப்பத்தூர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

நித்யம் காலையில் ப்ரதான வீதிகளில் நாராயண நாம கோஷத்துடன் வீதி பஜனை நடத்த ஏற்பாடு ஆகி உள்ளது. அதைத் தொடர்ந்து காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரை ஸப்தாஹ மூல பாராயணம் நடைபெறும். பிற்பகலில் நாராயணீய பாராயணமும் நடைபெறும். மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஸப்தாஹ ப்ரவசனம் நடைபெறும். பிறகு, மாலை 7 மணி முதல் ஸஹஸ்ரநாம பாராயணமும் ,திவ்யநாம ஸங்கீர்த்தனமும் நடைபெறும்.

பூர்த்தி தினம் அன்று ப்ரேமிகவரதனுக்கு ராதா கல்யாண மஹோத்ஸவம் நடைபெறும். அன்று மாலை ப்ரேமிகவரதனை யானை மீது எழுந்தருளச் செய்து புறப்பாடும் நடைபெற உள்ளது. ஸ்வாமிகள் அங்கு நடக்க இருக்கும் வைபவங்களையும், அதனுடைய மஹத்வத்தையும் வர்ணிக்க நம்முடைய ஹ்ருதயங்கள் எல்லாம் இப்பொழுதே அந்த வைபவத்தில் கலந்து கொள்ள குருவாயூர் சென்று விடுகின்றதல்லவா? பாக்யம் உள்ளவர்கள் இத்தகைய வைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

ஸ்ரீ ஹரி:

**உதயாஸ்தமன ஸப்தாஹ ஸதக்ரது மஹோத்ஸவம்**

**தேதி : மே 11-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை**

**ஸம்பூர்ண நாராயணீயம் பாராயணம்**

**தேதி : மே 18-ந் தேதி**

ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில்,
குருவாயூர் மேப்பத்தூர் மண்டபத்தில் நடைபெறும்.

# *பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்*

***கேள்வி : எத்தனை ப்ரயத்தனப்பட்டாலும் எனக்கு பக்தி வரமாட்டேன் என்கிறதே?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : உள்ளே உள்ள பக்தி என்ற ப்ரவாஹத்தை, காமம், உலக ஆசைகள் இவைகள் எல்லாம் மூடியுள்ளன. இவைகளை எப்பொழுது தகர்த்து எறிகின்றோமோ அப்பொழுதுதான் உத்தமமான பக்தி ஸித்திக்கும்,

***கேள்வி : எனக்கு எப்பொழுதும் நான்தான் பகவான் என்ற எண்ணம் தோன்றிக்கொண்டு இருக்கின்றதே?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : அப்படி தோன்றும்பொழுதெல்லாம், பகவானுடைய கல்யாண குணங்களோ, ஞானமோ, ஐஶ்வர்யமோ தங்களுக்கு உள்ளதா என்று விசாரித்துப் பார்த்தால், இல்லை என்றே தங்களுக்கே தோன்றும். அப்படி இருக்கையில், வெறுமெனே வார்த்தைகளால் நான்தான் பகவான் என்று கூறிக்கொண்டிருப்பதால் என்ன பயன்? ஆகவே, இத்தகைய எண்ணத்தை ஒழித்துவிட்டு தாஸ்ய **பா**வத்தில் பகவானிடத்தில் பக்தி பண்ணுவதே சாலச் சிறந்தது.

***கேள்வி : மனதில் எண்ணங்களும் எழவில்லை. அதே ஸமயம் மனோலயத்திலும் இல்லை. இத்தகைய நிலை சரியா? அதற்கு என்ன பெயர்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : தங்களுடைய மனது ஏகாக்ர நிலையை அடைந்து உள்ளதாக அர்த்தம். இது ஒரு நல்ல முன்னேற்றம்.

***கேள்வி : ஜப, தியானங்களில் நல்ல ஊக்கம் வர என்ன செய்ய வேண்டும்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : மஹாத்மாக்களின் சரித்திரங்களைப் படித்து வருவதால் மீண்டும் மீண்டும், ஜப, தியானங்களில் நன்றாக ஊக்கம் வரும்.

***கேள்வி : வேதங்களில் அணுகுண்டு, ஏரோப்ளேன், ராக்கெட் போன்றவற்றைப் பற்றியெல்லாம் சொல்லப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார்களே, உண்மையா?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : உண்மைதான். ஆனால், அதெல்லாம் அவ்வளவு வெளிப்படையாக புரியாது. இவ்விஷயங்கள் மறைத்தே பேசப்பட்டுள்ளன. மறைத்து சொல்வதாலும் கூட அதற்கு மறை என்று பெயர்.

# வேத கதைகள் - 34

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஸம்ஸ்காரங்களின் பெருமை

ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஶ்யர்கள் த்விஜர்கள் எனப்படுகிறார்கள். த்விஜர்கள் என்றால் இரு பிறப்பாளர்கள் என்று பெயர். பிறப்பு முதல் 40 ஸம்ஸ்காரங்கள் இவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கின்றன. கர்ப்பாதானம், பும்ஸுவனம், ஜாதகர்மா, நாமகரணம், அன்ன ப்ராஶனம், சௌளம், உபநயனம், நான்கு விரதங்கள், ஸமாவர்த்தனம், விவாஹம், பஞ்ச மஹா யஜ்ஞங்கள், 7 பாக யஜ்ஞங்கள், 7 ஹவிர் யஜ்ஞங்கள், 7 ஸோம யஜ்ஞங்கள் முதலியன. இவைகளை உரியகாலத்தில் அனுஷ்டானம் செய்தால் நல்ல அறிவு, நீண்ட ஆயுள் முதலிய எல்லா நன்மைகளும் கிடைக்கின்றன. இவைகளில் உபநயனத்தைப் பற்றிய ஒரு வரலாறு வேதங்களில் கூறப்பட்டுள்ளது.

ஒரு அரசனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவனைக் காட்டிலும் இளையவன் நல்ல அறிவாளியாக இருந்தான். அரசன் மறைந்த பிறகு, யாருக்கு ராஜ்யம் அளிப்பது என்று சர்ச்சை எழுந்தது. பொதுவாக மூத்தவனுக்கு தான் ராஜ்யம் என்று தொன்றுதொட்டு பழக்கம் இருந்து வருகிறது. அதை அனுசரித்து சில முனிவர்கள் மூத்தவனுக்குதான் ராஜ்யம் அளிக்கவேண்டும் என்று கூறினர். அறிவாளியாக இல்லாதவன் எப்படி அரசு புரியமுடியும்? ஆதலால் இளையவன் அறிவாளியாக இருப்பதால் அவனுக்குதான் ராஜ்யம் அளிக்கவேண்டும் என்று சிலர் வலியுறுத்தினர்.

அரசனை அரியணையில் அமர்த்துவதோ அல்லது இறக்குவதோ அக்காலத்தில் முனிவர்களுக்குதான் சக்தி இருந்தது. வேனன் என்ற ஒரு அரசன் ஒழுங்காக அரசு புரியாததால் முனிவர்கள் அவனை அழித்தனர் என்று வரலாறு கூறுகிறது. அதை அனுஸரித்து இந்த ஸமயத்தில் முனிவர்களுக்கு யாரை அரியணையில் அமர்த்துவது என்று குழப்பம் ஏற்பட்டது. பிறகு முனிவர்கள் ஒன்று கூடி மூத்தவனுக்குதான் ராஜ்யம் அளிக்கவேண்டும். ஆனால் அவனை அறிவாளியாக மாற்றி அவனுக்கு

ராஜ்யம் அளிக்கவேண்டும் என்று முடிவுசெய்தனர்.

அறிவில்லாதவனுக்கு அறிவை எவ்விதம் ஏற்படுத்துவது என்று ஆலோசனை செய்யும்பொழுது (தஸ்ய ஸ்த்ரீஷு தாஸ்யமித ஆத்ரேய:) ஆத்ரேயர் என்ற முனிவர், பெண்களிடத்தில் வேலைக்காரனாக ஆக்கினால் அறிவு இல்லாதவன் அறிவாளியாக ஆவான் என்று கூறினார். பெண்களுக்கு அடிமையாக இருப்பது ஆணுக்கு கௌரவத்தை குறைக்கும் என்று நினைப்பவன்தான் பெண்களுக்கு அடிமை வேலைசெய்தால் அறிவாளியாக ஆவான். பெண்களுக்கு சேவை புரிவதே பிறப்பின் பெருமை என்று நினைப்பவன் ஒரு நாளும் அறிவாளியாக ஆக மாட்டான். ஆதலால் இந்த வழி உயர்ந்தது அல்ல என்று தீர்மானித்தனர்.

இந்த மூத்த அரசகுமாரனுக்கு ஜாதகர்மா முதல் உபநயனம் வரை எல்லா ஸம்ஸ்காரங்களும் செய்யப்பட்டுவிட்டன. அவைகள் முறைப்படி செய்யப்பட்டு இருந்தால் அரசகுமாரன் அறிவாளியாக இருந்திருப்பான். அறிவாளியாக இல்லாததால் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்கள் முறைப்படி செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ஆதலால் உபநயனத்தை மறுபடியும் ஒரு தடவை முறைப்படி நன்றாகச் செய்தால், அறிவாளியாக ஆகிவிடுவான் என்பதில் ஸந்தேகம் இல்லை, உபநயனத்தை நன்கு செய்வோம் என்று தீர்மானிக்க உபநயனத்தை அந்த மூத்த அரசகுமாரனுக்கு முனிவர்கள் நன்கு செய்தனர். அதன் பின்னே அரச குமாரன் அறிவாளியாக ஆனான். முனிவர்கள் அவனை அரியணையில் அமர்த்தினர்.

உபநயனத்தின் பெருமை இப்படிப்பட்டது. ஆதலால் நாமும் நம் குழந்தைகளுக்கு உரிய காலத்தில் செய்யவேண்டிய உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களை முறைப்படி செய்தால் அவர்கள் அறிவாளியாகத் தான் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவைகளை நாம் நன்கு அனுஷ்டித்து இம்மை மறு[illegible] அடைவோமாக.

**பகவானது புனித நாமத்திலுள்ள மகிமையைத் திடமாக நம்பி ஒருவன் அதனை ஸர்வகாலமும் உச்சரிப்பதிலேயே பிரீதி கொள்வானானால் அவனுக்கு விசாரணையும் மற்ற இதர பக்தி சாதனைகளும் வேண்டுவதில்லை. பகவந் நாம ஜபத்தினாலேயே சகல சந்தேகங்களும் அகன்றுவிடுகின்றன: மனம் பரிசுத்தம் அடைகின்றது; பகவத் தரிசனமும் கிட்டிவிடுகின்றது.**

**- ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்**

# எந்தரோ மஹானுபாவுலு - 22

யதிராஜர், பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மேல்கோட்டையை விட்டுத் தம் சீடர்களுடன் திருவரங்கம் செல்லக் கிளம்பினார். அவருடன் மேல்கோட்டையை விட்டுக் கிளம்பிய பலரை, அவர் பரிவுடன் நிறுத்தி அனைவரையும், ஒற்றுமையாகப் பணிபுரிந்து அந்த ப்ரதேசத்தை உய்விக்குமாறு பணித்தார். அவர்களும் அதற்கு இசைந்தனர். எனினும், ''உம்மை விட்டு எப்படி பிரிந்து இருப்போம்'' என துக்கித்தனர். ராமானுஜர் சிறிது யோசித்துவிட்டு, தம்மைப் போலவே ஒரு விக்ரகத்தை உருவாக்குமாறு கட்டளையிட்டார். அதில் தன் சக்தியை ப்ரதிஷ்டை செய்து அவர்களிடம் தந்தார். அதனைக் கண்ட சீடர்கள் அனைவரும் உகந்தனர். இன்றும் அந்த விக்ரகம், ''தமர் உகந்த திருமேனி'' என்ற புகழுடன் திருநாராயணபுரத்தில் விளங்குகிறது.

ஸ்ரீரங்கம் திரும்பிய ராமானுஜருக்கு கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. வனவாசத்தை முடித்து அயோத்தி திரும்பிய ராமனைக் கண்டு அயோத்திவாசிகள் ஆனந்தித்தது போல், ஸ்ரீரங்கவாசிகள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர்.

கூரத்தாழ்வானும் ராமானுஜரது வரவு அறிந்து ஸ்ரீரங்கம் வந்தடைந்தார். அவரைக் கண்ட ராமானுஜருக்கு துக்கம் பீறிட்டு எழுந்தது. கூரத்தாழ்வான் கண்ணின்றி வாழ்வது ராமானுஜரது மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. ஆனால் கூரேஸனோ, ''குருநாதர் அளித்திருக்கும் என் ஞானக்கண்களே எனக்குப் போதும்'' என்ற மனநிலையில் இருந்தார்.

ஒருநாள் ராமானுஜர் கூரேஸனை அழைத்து, ''நீர் பேரருளாளனான வரதராஜபெருளாளனிடம் உமக்குக் கண்வேண்டும் என்று ஒரு தோத்திரத்தை விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்'' என்று வற்புறுத்தினார். கூரேஸன், ''வரதராஜபெருமாளை தோத்திரம் செய்கிறேன். ஆனால் கண்வேண்டும் என யாசிக்கமாட்டேன்'' என்றார். ராமானுஜர் மறுபடியும் நிர்பந்திக்க, ஆழ்வானும், ''வரதராஜஸ்தவம்'' என்ற தோத்திரத்தை இயற்றினார். அதில், எப்போதும் வரதராஜனைக் காண்பதற்குத் தகுதியான உலக இயற்கைக்கு அப்பாற்பட்ட திவ்யமான கண்களை அடியேனுக்கு தந்தருளவேணும்'' என ப்ரார்த்தித்தார். வரதராஜஸ்தவத்தை முற்றுப்பெறச்செய்து ராமானுஜரின் மடத்துக்குச் சென்று தண்டனிட்டார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த ராமானுஜர் கூரேஸனின் கையைப் பிடித்துக் கொண்டு காஞ்சீபுரத்துக்கே அழைத்துச் சென்று வரதராஜர் ஸன்னதியில் தோத்திரத்தைக் கூறச்செய்தார். பெருமாள் அர்ச்சகர் மூலம், ''ஆழ்வானே! உனக்கு என்னவேண்டும்?'' என்று கேட்க, கூரேஸன், ''நான் பெற்ற பேற்றை நாலூரானும் பெறவேண்டும்'' என்று வரம் கேட்டார். தான் கண் இழப்பதற்கே காரணமான நாலூரானிடமும் இப்படி அதீதமான பரிவைக் காட்டும் ஆழ்வானின் உயர்ந்த குணத்தைக் கண்டு ராமானுஜரே ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார்.

ராமானுஜர் கூரேஸனை நோக்கி, மறுபடியும் வரதராஜபெருமாளிடம் பார்வை வேண்டிக் கேட்டுக்கொள்ளவேண்டும் என நிர்பந்தித்தார். ஆழ்வானும், குருவின் கட்டளையை மீற முடியாமல் ப்ரார்த்தனை செய்ய, பகவான், ''உன் உடலில் தூய இரு தெய்வீகக் கண்கள் தோன்றி உன்னை அளவின்றி மகிழ்விக்கும்'' என வரம் தந்தான்.

கொடுமையான எதிரியிடமும் பரம கருணை காட்டிய தமது சீடனைப் பார்த்து ராமானுஜர் ஆனந்தத்துடன் குதித்துக்கொண்டே அனைவர் முன்பாக, ''நான் நிச்சயம் பரமபதம் பெறுவேன். ஏனெனில் கூரத்தாழ்வானின் எதிரிகளே பரமபதம் பெறக்கூடும் என்றால் நான் கட்டாயம் பரமபதம் பெறுவதில் என்ன தடை இருக்கமுடியும்!'' என்று கோஷமிட்டு உரைத்தார். தம் பக்தர்களது உன்னத குணங்களை மஹான்கள் இயல்பாகப் போற்றுவது அவர்களது பெருமை.

யதிராஜர், மேல்கோட்டையிலிருந்து ஸ்ரீரங்கம் வரும் வழியில் திருமாலிருஞ்சோலையில் தங்கியிருந்து சுந்தரத்தோளுடையானைத் தொழுதார். இந்த எம்பெருமானிடம் ஸ்ரீ ஆண்டாள், ''திருமாலிருஞ்சோலை எம்பெருமானே! நீ என்னை அருள் கொண்டு மணந்தால் நூறு பானை வெண்ணெயும், நூறு பானை அக்காரவடிசிலும் உனக்கு நிவேதனம் செய்வேன்'' என்று வேண்டிக்கொண்டிருந்தாள்.

ஆண்டாளின் ப்ரார்த்தனையை பரமன் நிறைவேற்றி வைத்தான். ஆனால் ஆண்டாளால் தன் வாக்கைக் காக்க முடியவில்லை. ஏனென்றால், பரமனை நெருங்கியதுமே அவள் அவனுடன் கலந்துவிட்டாள். எனவே ராமானுஜர் அவளது வாக்கை நிறைவேற்றுவதற்காக சுந்தரத் தோளுடை யானுக்கு நூறு பானை வெண்ணெயும், நூறு பானை அக்காரவடிசிலும் நிவேதனம் செய்வித்தார். ஓர் அண்ணனுக்குரிய இந்த நற்செயலைச் செய்ததால், ராமானுஜர், ''கோவிலண்ணர்'' என்ற புகழ் பெயர் பெற்றார்.

அங்கிருந்து ராமானுஜர், ஆண்டாளின் அவதாரத்தலமான ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்றார். அங்கே ஸ்ரீ ஆண்டாளே, அவரை, ''வாரும் எம் அண்ணாவே'' என அழைத்ததாலேயே அவருக்கு மேலே சொன்ன பெயர் உண்டாயிற்று. பிறகு ஆழ்வார்திருநகரி சென்று நம்மாழ்வாரைச் ஸேவித்து ஸ்ரீரங்கம் வந்தடைந்தார்.

இரண்டு ஆண்டுகள் கழிந்து, கூரத்தாழ்வானின் திருமேனி மிகவும் மெலிந்து, அவர் படுத்த படுக்கையானார். ஒருநாள் யதிராஜரின் முன்னிலையில் பக்தர்கள் சூழ்ந்திருக்க பரமனின் துதிகளைக் கேட்டுக்கொண்டு, ஆனந்தக் கண்ணீர் பெருக்கிய வண்ணம் ஆசார்யரான ராமானுஜரது கமல பாதங்களைப் பிடித்துக்கொண்டே பரமபதம் எய்தினார். அனைவரும் சோகக்கடலில் மூழ்கினர். யதிராஜரும் அளவில்லாக் கண்ணீர் பெருக வருந்தினார்.

பிறகு தம்மைத் தேற்றிக்கொண்டு பக்தர்களை நோக்கி, ''கூரத்தாழ்வான் புதல்வன் பராசரபட்டர், உண்மையில் ஸாக்ஷாத் ஸ்ரீரங்கநாதனுடைய பிள்ளையே ஆவார். இன்றிலிருந்து அவரை உங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளுங்கள். வருங்காலத்தில் வைணவப் பேரரசை அவர் அடக்கி ஆள்வார்'' என்று கூறினார்.

பிறகு பராசரபட்டரை அரியணையில் அமர வைத்து தலையில் மணி முடிசூட்டி, மாலைகள் அணிவித்து எல்லா அடியார்களையும் ஆசிமொழி வழங்கச் சொன்னார். பிறகு தாமே அவரை அணைத்துக்கொண்டு தம்முடைய சக்தி அனைத்தையும் அவரிடம் செலுத்தி அவரைப் பேறு பெற்றவராக்கினார். பிறகு கூரத்தாழ்வானின் திருமேனிக்குக் காவேரிக்கரையில் இறுதிக் கிரியைகளை தாமே முன்னின்று நடத்தி வைத்தார்.

அதன்பிறகு யதிராஜர் ஸ்ரீரங்கத்தை விட்டு என்றும் வெளியே செல்லவில்லை. தொலைவிலிருந்தும் அருகிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் அவரைத் தரிசிக்க வந்தனர். அவருக்கு அப்பொழுது அறுபது வயதாக இருந்தது. இதற்குப் பிறகு அவர் அறுபது ஆண்டு காலம் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியில் பணி செய்துகொண்டு சீடர்கள் புடைசூழ மக்களுக்கு நலம்புரிந்து வாழ்ந்திருந்தார்.

அவரது பொன்மொழிகள் அனைவரின் துயரங்களையும் நீக்கியது. இந்த உலகை வைகுண்டம் போலவே இன்ப நிலமாக்கி தாம் தேர்ந்தெடுத்த சில சீடர்களுக்குத் தம்மைப் போலவே குணாதிசயங்களைப் பெரும் தகுதியை அளித்தார்.



எழுபத்து நான்கு ஆசாரியர்களைத் தேர்ந்தெடுத்து பகவானுடைய பணிகளையும் பாகவதர்களுக்கு உரிய பணிகளையும் தொண்டர் குலத்தின் ஒருமைப்பாட்டைத் தொடர்ந்து வளர்க்கும் சிறப்புப் பணிகளையும் மேற்கொள்ளுமாறு பரிவுடன் கட்டளையிட்டார். தம் நோக்கம் இனிது நிறைவேறுமாறு எழுநூறு துறவிகளையும் வேறு பல்லாயிரம் பாகவதர்களையும் நியமித்தார். இந்த எழுபத்து நான்கு சிம்மாஸனாதிபதிகளுடனும் எழுநூறு துறவிகளுடனும் ஒத்துழைத்த பன்னீராயிரம் பாகவதர்களை **ஏகாங்கிகள்** என்று கூறுவர்.

ராமானுஜரது புகழ் உச்சிநிலையிலிருந்தபொழுது இவர் பிறந்த ஸ்ரீபெரும்புதூரில் இவரது விக்ரகத்தை ப்ரதிஷ்டை செய்யவேண்டுமென்ற விருப்பம் பக்தர்களுக்கு ஏற்பட்டது. உடனே ஒரு சிற்பியை அழைத்து அந்தக் கைங்கர்யத்தில் ஈடுபடச் செய்தார்கள். அச்சிற்பி ராமானுஜரை தியானித்து தியானித்து அர்ச்சா விக்ரகத்தில் அவரை உருவாக்கிக் கொண்டு வைத்தான். ராமானுஜர் உகப்புடன் அதைத் தழுவிக்கொண்டார். (தனது ஸர்வசக்தியையும் அதில் தங்கும்படி தழுவிக் கொண்டார் என்பது ஐதிகம்.)

ராமானுஜரது விக்ரகத்தை ஸ்ரீபெரும்புதூரில் ப்ரதிஷ்டை நடந்த அதே தினத்தில் ராமானுஜரின் திருமேனியில் தளர்ச்சி அதிகரித்து விட்டதாம். இந்த விக்ரகம் ராமானுஜரே உகந்து அணைத்துக் கொண்ட ஒன்றானதால், இதற்கு, ''தான் உகந்த திருமேனி'' என்று பெயரிட்டு அழைக்கலானார்கள். திருமேனி தளர்ந்திருந்தாலும் ராமானுஜர் உள்ளம் குதூகலமாகவே, பக்தர்களுக்குப் பக்குவம் அறிந்து உபதேசம் செய்வதிலும், காலக்ஷேபங்கள் செய்வதிலும் ஈடுபட்டிருந்தது.

எவ்வளவோ தூரத்தையும் ஸமீபமாக்கி, அன்னியரையும் அன்பர்களாக்கிக் கொண்ட ராமானுஜரின் திருவடிநிழலில் பலரும், ''ஆசைகளுக்கும், அல்ப ஸௌக்கிய வாழ்க்கைக்கும் அப்பாற்பட்ட ஆனந்தநிலை ஒன்று உண்டு'' என்பதை உணர்ந்து வாழலாயினர். உடையவரது உபதேச ரத்தினங்களை அனுபவிக்கும் இச்சுவையிலேயே இவர்கள் பேரின்ப நிலையையும் கண்டுகொண்டார்கள். எனினும் ராமானுஜருக்கு இப்பொழுது அச்சுவையில் ருசியும், இச்சுவையில் அருசியும் ஏற்படலாயின. அவர் கண் முன்பு கூரேசன் காலமானது போல் வேறு பல அன்பர்களும் காலமானார்கள். பிள்ளை உறங்காவில்லிதாசரும், பொன்னாச்சியும் காலமாகிவிட்டார்கள்.

ஒரு நாள் பாகவதர்கள் சிலர், பொன்னாச்சியிடம், ''அம்மணீ! ராமானுஜரையே ஶரணமாக அடைந்து, ரக்ஷகராக ஏன் போற்ற

வேண்டும்?'' என்று கேட்டார்கள். அவள் புன்னகை புரிந்து தனது நீண்ட கூந்தலைச் சுற்றி ஒரு சிவப்புக்கயிறு கொண்டு கட்டி ஒழுங்குபடுத்திக் கொண்டாள். உடனே பாகவதர்களை நோக்கி, அறிவு புகட்டும் ஆசிரியர்கள், தலை ரோமம் போல் பலவாக இருக்கலாம். ஆயினும் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கட்டிக் காக்கும் தலைவர் ராமானுஜர் என்ற பரமாசாரியரே! என்று சொன்னாள்.

கூரேசன் மறைவுக்குப் பிறகு, பிள்ளை உறங்கவில்லிதாஸர் பேய் போலவும், பித்தனைப் போலவும் திரிந்து கொண்டிருந்தார். தமக்கும் அந்திம தசை வந்துவிட்டது என்று உணர்ந்து, பொன்னாச்சியிடம், ''என் பிரிவு குறித்து நீ கலங்காதே. நமது அன்பு நெறியில் பிரிவுக்கோ, மறைவுக்கோ இடம் ஏது'' என்றார். அவளும் அப்படியே ராமானுஜர் திருவடிகளே ஶரணம் என்று சொல்லிக்கொண்டே கணவர் அருகில் இருந்தாள். வில்லிதாசர் ராமானுஜரின் திருவடி நிலைகளைத் தலையில் வைத்துக்கொண்டே பரமபதம் அடைந்தார்.

பிள்ளை உறங்காவில்லிதாஸனின் உயிர் நீத்த உடம்பை, அலங்கரித்த பூப்பல்லக்கில் ஏற்றி ஏகாங்கிகள் தூக்கிக்கொண்டுபோகும் பொழுது கண்களில் துளி நீரும் ததும்பாமல் பார்த்துக்கொண்டு நின்றாள் பொன்னாச்சி. பல்லக்கு மறைந்த அளவில், ''துணை காணேன், ஊரும் துஞ்சிற்று, உலகும் துயின்றது... தேரும் போயிற்று, திசைகளும் மறைந்தன! செய்வதொன்று அறியேனே!'' என்ற திருமங்கைமன்னனின் பாசுரப்பகுதிகளைச் சொல்லிப் புலம்பினாள். பிறகு பல்லக்கு சென்ற திசை நோக்கிக் கும்பிட்டுக் கீழே மூர்ச்சித்து விழுந்து மரணமடைந்தாள். அவளையும் வில்லிதாசருடன் பள்ளிபடுத்தி அந்திமக்ரியைகளை நடத்தினார். இப்பேர்ப்பட்ட சோக நிகழ்ச்சிகள் ராமானுஜருள்ளத்தில் உலக வாழ்க்கை மீது அருசி ஏற்பட்டதற்கு ஒரு பெரும் காரணமாகும்.

இனி தானும் பரமபதம் அடையவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று உணர்ந்து, ராமானுஜரின் சிந்தனை அலைகள் ஒடுங்கி ஒடுங்கி உள்முகமாய்ச் சென்றன. ராமானுஜரின் சீடர்களும் தாம் அநாதைச் சிறுவர்களாகிவிடுவோமோ என உணர்ந்து துக்கிக்கலானார்கள. ராமானுஜர், ''ஒரு கணமும் உங்கள் இதயத்தை விட்டுப் பிரியாத நிலையைத்தான், நான் அடையப்போகிறேன்'' என்று அவர்களைத் தேற்றி, ஸ்ரீரங்கநாதனின் ஸந்நிதிக்கு எழுந்தருளி பெரியபிராட்டியை புருஷாகாரமாகக்கொண்டு ''அடியேனைக் காலக்கழிவு செய்யாமல் உன் பொன்னடி சேர்த்துக்கொள்ள வேண்டும்'' எனப் ப்ரார்த்தித்தார்.

''இன்றைக்கு ஏழாம் நாள் அப்படியே செய்கிறோம்'' என்று பெருமாள் தம் வாய்த் திறந்து அருளிச் செய்ததை அவர் உணர்ந்தார். மடத்துக்குத் திரும்பி சீடர்களுக்கு ஒருகாலும் அருளிச் செய்யாத அர்த்த விசேஷங்களை மூன்று நாட்களில் வழங்கினார். ''இதன் பொருள்களை எல்லாம் நீங்கள் நம்பி ஒழுகி வந்தால் மட்டும் போதாது. உங்களைப் பற்றிக் கொண்டவர்களுக்கு வழிவழியாக உபதேசிக்க வழி காணுங்கள்'' என்று கட்டளை இட்டார். இன்றைக்கு நாலாம் நாள், நாம் பெருமாள் திருவடியை அடையப்போகிறோம் என்று அவர் கூறினதும் சீடர் பெருங்குழாம் கடல்கலங்கினாற்போல் துயருற்றனர்.

உடையவர் உயிர்துறந்தால் நாமும் ஆத்ம தியாகம் செய்து கொள்வோம் என்று சில சீடர்கள் துணிந்திருந்தனர். இதை அறிந்த ராமானுஜர் அந்த மனப்பாங்கு நம்மாழ்வார் தொடக்கமாக வரும் ஸம்ப்ரதாய பரம்பரைக்கு விரோதமானது என்றார். உயிர் வாழ்ந்து த்யாகரூப கைங்கர்யங்கள் புரிந்து கொண்டிருப்பதுதான் ஸ்ரீ வைஷ்ணவ தர்மம் என்பதை வற்புறுத்தி அவர்களைத் தேற்றினார். பிறகு நடாதூராழ்வானை நோக்கி, ''நீர் பாஷ்யத்தைப் பரப்புவதில் கருத்துடனிருக்கவேணும்'' என்று ஸ்ரீபாஷ்ய ஸிம்மாஸனத்தை அளித்தார்.

குருகைப்பிரான், பிள்ளான் முதலியோரை நோக்கி, பட்டருக்கு இஷ்டமாயிருங்கள் என்றார். கோயில் கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தவர்கள் அனைவரையும் நோக்கி, ''நான் தவறுகள் செய்திருந்தால் அவற்றைப் பொறுத்துக்கொண்டு, என்னை மன்னிக்க வேண்டும்'' என வேண்டிக் கொண்டார். அவர்கள் திடுக்கிட்டு, ''தேவரீரும் தவறு செய்வதுண்டோ - உலகத்துக்கு எல்லாம் ஒருயிரான தேவரைப் பிரிந்து நாங்கள் எப்படிப் பொறுத்திருப்போம்'' என்று கண்ணீர்பெருக்கி அழலானார்கள்.

பிறகு ராமானுஜர், ''அரங்கனிடம் பக்தியும் அன்பும் இருக்கும் உங்களுக்கு ஒரு தாழ்வுமில்லை. பணிகளை செவ்வனே நடத்திக் கொண்டு பாகவதர்கள் அனைவரும் அன்பால் ஒன்றுபட்டு வாழுங்கள்'' என்று சொன்னார். பிறகு பட்டரிடம், ''உமக்குத் தந்தையும் தாயுமானவர் நம்பெருமாள்தானே! - அவனுடைய ஆராதனத்தை நன்றாக நடத்திக் கொண்டு நம்முடைய தரிசனத்தை நன்றாகப் பரவச் செய்வீர்'' என்றார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# திருத்தெற்றியம்பலம் ஸ்ரீ பள்ளிகொண்டபெருமாள் திவ்யதேசம் – மஹாஸம்ப்ரோக்ஷணம்

திருநாங்கூர் திருத்தெற்றியம்பலம் செங்கமலவல்லித் தாயார் ஸமேத ஸ்ரீ பள்ளிகொண்டரங்கநாதப் பெருமாள்கோவில் மஹா ஸம்ப்ரோக்ஷணம் நம் ஸ்வாமிகள் முயற்சியால் ஏப்ரல் 9-ந் தேதி நடைபெறவுள்ளது. சென்ற வருடத்திற்கு முன்வருடம் ஜூலை மாதம் (1999-ல்) திருஅரிமேய விண்ணகரம் திவ்யதேசத்திற்கு மஹாஸம்ப்ரோக்ஷணம் நம் ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

திருத்தெற்றியம்பலம், ''சிலம்பிய தற்பெருஞ் செல்வம் திகழுநாங்கூர், சீரணிந்த மணிமாடம் திகழுநாங்கூர், மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர், மண்ணுளார் புகழ் வேதியர் நாங்கூர்'' என்று திருமங்கையாழ்வாரால் அழைக்கப்பட்ட சிறப்புடைய திருநாங்கூர் க்ஷேத்ரத்தில் உள்ள திவ்யதேசங்களில் ஒன்றாகும். இது நாங்கூர் கீழ் வீதியிலிருந்து மேற்கே செல்லும் சாலையில் சிறிது தொலைவில் அமைந்துள்ளது. மணிமாடக்கோவிலுக்கு சற்று வடக்கேயுள்ளது. சோழநாட்டு 40 திருப்பதிகளில் 36வதாக போற்றப்படுகிறது. இக்கோவில், கருவறை, அர்த்தமண்டபம், மஹாமண்டபம், மஹாமண்டபம் ஒரு ப்ராகாரம், திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

விமானத்திற்கு ஃப்ருதீய விமானம். (வேதவிமானம்) என்று பெயர். மூலவர் செங்கண்மால், ஆதிசேஷன் மீது தெற்குப் புறத்தில் தலையை வைத்துக்கொண்டு பள்ளிகொண்ட கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். பெருமாளுக்கு நான்கு புஜங்கள். புஜங்க ஶயனம், கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். தலைப்பக்கத்தில் திருமகள். கால்பக்கத்தில் பூமிதேவி. தாயார் திருநாமம் - செங்கமலவல்லி. தாயாருக்கு தனிச் சந்நிதி உள்ளது. தீர்த்தம் - ஸூர்ய புஷ்கரணி. பெருமாளுக்கு - ரக்தாக்ஷர், லக்ஷ்மீரங்கர், செங்கண்மால், ரங்கநாதன் என்ற திருநாமங்களும் உண்டு. எனினும், பள்ளிகொண்டபெருமாள் என்ற பெயரால் ப்ரஸித்தம்.

உத்ஸவர்-லக்ஷ்மீநாராயணர். நாச்சியாருக்கும், அநந்தாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார், பள்ளிகொண்டபெருமாளை க்ருஷ்ணனாகவும், ராமனாகவும், வாமனனாகவும், வராஹமாகவும்

அனுபவிக்கிறார். கண்ணனாக காணுகின்றபொழுது அவனுடைய பால்ய லீலைகளைப் பாடுகின்றார். திருஆய்ப்பாடியில் உள்ள மச்சிலும் மாளிகையிலும் ஏறி லீலை செய்ததைப் பாடுகின்றார்.


***''மாற்றரசர் மணி முடியும் திறலும்...***
***திருத்தெற்றியம்பலத்தான் செங்கண்மாலே''*** எனத் தொடங்கி பத்து பாசுரங்கள் இந்த திவ்யதேசத்தைப் பற்றி திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.

''செங்கண்மால் திருத்தெற்றியம்பலத்தேயுள்ளார் என்றும், பேய்ச்சி பாலுண்டவன் வாழும் இடம் இது என்றும், கண்ணனே திருத்தெற்றியம்பலத்து ஐயன் என்றும், நப்பிண்ணை மணாளன் வாழும் இடம் இது என்றும், செங்கண்மால் வாழ்விடம் இது என்றும், ராவணன் தோள்களை துணிந்தவன் இடம் இது என்றும், குறளுருவான பெருமான் வாழ்விடம் இது என்றும், வராஹவதாரம் எடுத்தவன் வாழுமிடம் இது என்றும், உலகங்களனைத்தையும் தன் வயிற்றிலடக்கியவன் அமருமிடம்'' என்றும் அனுபவித்துப் பாடுகிறார்.

புராணவரலாறு : பூமிதேவியை வராஹமூர்த்தி இடந்தெடுத்த பொழுது அவர்திருக்குளம்பில் சிலம்பினிடைச் சிறுபரல் போல் பெரியமேரு மலை கணகணவென ஒலிக்க, மார்பில் திருமடந்தையின் இருப்பும் குலுங்கும் என்ற ஆழ்வாரின் பாசுரப்படி எம்பெருமான் வராஹ அவதாரம் எடுத்து ஹிரண்யாக்ஷனைக் கொல்லச் சென்றபொழுது எம்பெருமான் பிரிவாற்றாமையால் ஸ்ரீ லக்ஷ்மிதேவியும் ஸ்ரீ ஆதிசேஷனும் தவம் செய்து, எம்பெருமான் அவர்களுக்கு ஸேவை ஸாதித்து, ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஆதிஸேஷன்மேல் பள்ளிகொண்டிருக்கிறார்.

ஆழ்வார், நாங்கூரின் வயல் வளத்தையும், நகர் வளத்தையும், மக்களின் பக்தி வளத்தையும் சொல்கிறார். நாங்கூரில் வயல்நண்டுகள் உணவுக்காக தாமரைப் பூவினுள் சென்று புக, அதன் வளைகளைப் பாக்கு பாளைகளின்று உதிரும் வெண் முத்துக்கள் மூடுகின்றதாம். நகரின் மலை போன்ற மாளிகைகளில் மகளிர் தன் குழந்தைகளுடன் கொஞ்சுகின்றனர். வீதிகள்தோறும் நான்மறைகள், இதிஹாஸ புராணங்கள் ஆகியவற்றின் முழக்கம் கேட்டுக்கொண்டே இருந்ததாம். இங்கு உத்ஸவப்பெருமாள், தை அமாவாஸ்யைக்கு மறுநாள் கருடசேவைக்குப் புறப்பட்டுச் செல்வது அழகாக இருக்கும். இப்பெருமை வாய்ந்த திவ்யதேசத்தின் மஹாஸம்ப்ரோக்ஷணம் காண கண்கள் கோடி வேண்டும் என்று சொல்லவும் வேண்டுமோ.

■



# ஜோதிஷம்

- ஸ்ரீ ஸ்வாமிகள்

பலர் என்னிடம் வந்து ஜோதிஷம் என்பது உண்மையான ஶாஸ்த்ரமா என்று வினவுகிறார்கள். மேலும் பலர் என்னிடம் தங்களுடைய குறைகளை சொல்லும்பொழுதே, நான் இன்ன ராசி, இன்ன நக்ஷத்ரம், எனக்கு நேரம் எப்படி இருக்கிறது என்றும் கேட்கிறார்கள். இதுபோல் பலர் எப்பொழுதும் தங்களுடைய கைகளில் தங்களுடைய ஜாதகத்தின் நகலை வைத்துக்கொண்டு அலைகின்றனர். ஏதாவது ஒரு ஜோதிடரைப் பற்றிக் கேள்விப்பட்டுவிட்டால் அவரிடம் சென்று தங்களுடைய ஜாதகத்தை காண்பிக்காவிட்டால் அவர்களுக்கு தூக்கமே வராது. எதற்கும் பரிகாரம் தேடி அலைந்து பலவிதமான பரிகாரங்களைச் செய்ய முற்படுகின்றனர்.

மஹாக்ஷேத்ரங்களில் கூட ஏதோ புண்ணிய காலங்களில்தான் ஜனங்கள் கூடுகின்றனர். ஆனால் திருநள்ளாறு போன்ற நவக்ரஹ க்ஷேத்ரங்களில் ஒரு நித்யோத்ஸவம் போல் கூட்டம் கூடுகின்றது. திருநள்ளாறு ஒரு ஶிவக்ஷேத்ரம். அதில், ஶனீஶ்வரனுக்கு ஒரு ஸன்னதிதான் என்பது கூட மறந்து, இன்று ஶனீஶ்வரனுக்கே ஒரு ப்ரதானமான கோவில் மாதிரி ஒரு தோற்றம்கூட வந்துவிட்டது. பலர், பெரிய கோவில்களுக்குச் சென்று அங்குள்ள ப்ரதானமான மூர்த்தியைக் கூட தரிசனம் செய்யாமல் நவக்ரஹத்தை மட்டும் சுற்றி வருவதும் உண்டு.

இன்றைய நாளேடுகள், வார இதழ், மாத இதழ் போன்றவை முதற்கொண்டு, ராசிபலன் போடாத ஸஞ்சிகைகளே இல்லை எனக் கூறலாம். கடவுளை ஏற்க மறுப்பவர்கள் பலர் கூட, ஜோதிடர்களைப் பார்த்து தங்களுடைய எதிர்காலம் பற்றி வினவுவதை நான் பார்த்ததுண்டு. சிலர் ஜோதிடர்களை கலந்தாலோசிக்காமல் தும்மல் கூட போட யோசிப்பார்கள். மேலும் பலர் தங்களுக்குத் தானே பல புத்தகங்களைப் படித்து தங்களுடைய ஜாதகத்தை மீண்டும் மீண்டும் தனக்குத் தானே பார்த்துக் கொண்டே இருப்பார்கள். ஆன்மீக வாழ்க்கை வாழ்பவர்கள் கூட, பலர் தங்களுடைய ஜாதகத்தை பலரிடம் காண்பித்து, தங்களுக்கு ஞானம் வருமா என்று ஞானத்தை ஜாதகத்திலேயே தேடுகின்றனர். இப்படிப் பலர் ஜோதிடத்திற்கு Addictஆக இருக்கிறார்கள்.

ஜோதிடம், பாமரர் முதற்கொண்டு, படித்தவன், அரசியல்வாதி, தனவந்தன், ஆன்மீகவாதி என்று பலரையும் படாதபாடு படுத்துகின்றது.

தங்களுடைய கஷ்டத்தை எல்லாம் போக்குவார் என்று பலர், பல ஸ்வாமிகளை அண்டி இருப்பார்கள். ஆனால் அந்த ஸ்வாமிகளோ, தனது கஷ்டத்தை போக்கிக்கொள்ள ஜோதிடர்களை நாடி நிற்பார்கள். பல Intellectகள், ஜோதிடத்தை முழுவதுமாக நம்புவதற்கும் இல்லை. ஒதுக்குவதற்குமில்லை என அங்கலாய்ப்பதுண்டு.

ஜோதிஷம், வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒரு அங்கமாகப் ப்ரகாசிக்கின்றது. வேதபுருஷனின் நேத்திரமாகவும் விளங்குகின்றது. வேதம் எந்த அளவிற்கு ப்ரமாணமோ அந்த அளவிற்கு ஜோதிடமும் ப்ரமாணம்தான். ஜோதிடம் என்பது ஒரு தெய்வீகக் கலை. ஜோதிட ஶாஸ்த்ரத்திற்கு பிதா என்ற ஸ்தானம் வராஹமிஹிரரையே சாரும்.

விக்கிரமாதித்தனுடைய ஸபையில் மிஹிரர் அங்கம் வகித்து வந்தார். விக்கிரமாதித்தனுக்கு குழந்தை பிறந்த உடனேயே மிஹிரரை அழைத்து அந்த சிசுவின் ஜாதகத்தைக் கணித்து பலாபலன்களைக் கூறும்படி உத்தரவிட்டான். மிஹிரரோ, சிசுவின் ஜாதகத்தை கணித்துவிடலாமே தவிர பலாபலன்களை இப்பொழுது பார்ப்பது உகந்ததல்ல என்றும் தெரிவித்தார். ஆனால், பிடிவாதமாக விக்கிரமாதித்தன் நிர்பந்திக்கவே, ஜாதகத்தை கணித்து பலாபலன்களைப் பார்த்த அவர், இந்தக் குழந்தை சிறு வயதிலேயே இறக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

மிஹிரர் சொன்ன பல விஷயங்கள் நடந்து இருந்தபோதிலும், மிஹிரர்மேல் அபார பக்தி கொண்டிருந்த போதிலும், தன் குழந்தையின் மேலிருந்த பாசத்தினால், விக்கிரமாதித்தனால் ஏனோ அந்த விஷயத்தை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. மிஹிரரைப் பார்த்து, அப்படி ஏதும் நடக்காது என்று ஆவேசமாகக் கூறினான். மிஹிரரோ தான் சொன்ன கணக்கு தப்பாது என்று தன் ஶாஸ்திரத்தின் மேல் உள்ள பக்தியால் தெரிவித்தார்.

அப்படி நடக்கவில்லை என்றால் உன் சிரசை வாங்கிவிடுவேன் என்றான் விக்கிரமாதித்தன். நடந்துவிட்டால் என் செய்வீர் என்றார், மிஹிரர். என் ராஜ்யத்தை வேண்டுமானாலும் தந்துவிடுவேன் என்றான் விக்கிரமாதித்தன். இப்படி இவர்களிடையே பந்தயம் வலுத்தது. எதனால் என் குழந்தைக்கு மரணம் ஏற்படும் என்று கேட்டான் விக்கிரமாதித்தன். ஒரு காட்டுப் பன்றியால் அவனுக்கு மரணம் ஏற்படும் என்று அவன் ஜாதகம் தெரிவிக்கிறது என்றார் மிஹிரர்.

மிஹிரர் குறிப்பிட்டிருந்த தினத்திற்கு முன்பாக பல அடுக்குகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தைக் கட்டி, பல கடுமையான காவல்களை வைத்து தன்னுடைய குழந்தையை சிறை செய்வது போல் அந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தில் வைத்துவிட்டான் விக்கிரமாதித்தன். அந்திம காலம் ஸமீபித்த பொழுது விக்கிரமாதித்தன், ''மிஹிரரைப் பார்த்து உன்னுடைய வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள். ஏனெனில், நீ சொன்னது நடக்கப் போவதில்லை. வீணாக என் கையால் கொலையாகாதே'' என்று கூறினான். மிஹிரரோ தான் சொன்ன விஷயத்தில் மிகவும் தீர்மானமாக இருந்தார்.

அந்த நேரம் கடந்தவுடன் ராஜாவிடம் பயந்துகொண்டே காவலாளிகள் குழந்தையின் மரணச் செய்தியை தெரிவித்தனர். ராஜா சோகத்தை அடைந்தான். அதே ஸமயத்தில், இது எப்படி நேர்ந்திருக்கும் என்று வியப்பும் அடைந்தான். பாண்டியனுக்கு எப்படி மீன் கொடியோ, சேரனுக்கு எப்படி புலிக்கொடியோ, அதுபோல் விக்கிரமாதித்தனுக்கு காட்டுப்பன்றிதான் அவனுடைய அரசாங்க சின்னமாகும். எந்த அரசு கட்டிடம் கட்டினாலும், அது அரசுக்கு சொந்தமானது என்பதற்கு அடையாளமாக காட்டுப்பன்றி சின்னத்தை அங்கு வைப்பதுண்டு. குழந்தையைத் தங்க வைப்பதற்காக கட்டிய பலமாடிக் கட்டிடத்தில் அவர்களின் அரசாங்க சின்னமான காட்டுப்பன்றியை உலோகத்தினால் செய்து மேலே வைத்திருந்தான்.

ஏதோ ஒரு விஷயமாக மிஹிரர் சொன்ன அந்த குறிப்பிட்ட காலத்தில் மொட்டைமாடிக்குச் சென்றது குழந்தை. உயர்ந்த கட்டிடமாக இருந்ததால், வீசிய காற்றில் அந்தக் காட்டுப்பன்றி உருவம் குழந்தை மேல் விழுந்து குழந்தை இறக்க நேரிட்டது. விக்கிரமாதித்தன், மிஹிரரைக் கையைப் பிடித்து அழுதுகொண்டு, உயிருள்ள காட்டுப்பன்றியா, உயிரில்லாத காட்டுபன்றியா என்று தாங்கள் சொல்லவில்லையே என்று கேட்டான். மிஹிரர், **''இதுதான் எனக்கும் இறைவனுக்கும் உள்ள இடைவெளி''** என்று பதில் சொன்னார். இந்த ஸம்பவத்தை சரியாக Predict செய்ததாலேயே அவருக்கு **வராஹமிஹிரர்** என்ற பெயர் வந்தது.

(தொடரும்)

**நெருப்பில் இருக்கும்வரையில் தான் இரும்பு செந்நிறமுள்ளதாக இருக்கும். நெருப்பைவிட்டு அகற்றியதும் அது கருநிறமடைந்துவிடும். அதுபோல ஈசுவரனுடைய உறவு கொண்டாடும் வரையில்தான் மனிதன் ஈசுவரத்தன்மை பொருந்தியவனாக இருப்பான். ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்**

# மஹாபாரதக் கதைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## பதிவ்ரதா மஹாத்மியம்

பிறகு, அஸ்வபதி மஹாராஜன் தனது பெண் ஸாவித்ரியை ஸத்யவானுக்கு மணம் செய்து கொடுப்பதிலேயே தனது எண்ணத்தைச் செலுத்தி, விவாஹத்திற்கு தேவையான பொருள்கள் அனைத்தையும் சேகரித்தான். பின்னர், தனது ஸபையில் இருந்த அனைத்து பெரியோர்களையும், முதிய ப்ராஹ்மணர்களையும், புரோஹிதர்களையும் அழைத்துக் கொண்டு ஸாவித்ரியோடுகூட புறப்பட்டான்.

ஒரு நல்ல நாளிலே கிளம்பிய அந்த அரசன், வனத்திலுள்ள த்யுமத்சேனருடைய ஆஶ்ரமத்தை அடைந்து, கால்களாலே நடந்து, ப்ராஹ்மணர்களுடன் அந்த ராஜரிஷியை அணுகினான். அந்த ஆஶ்ரமத்தில் மஹாபாக்கியமுள்ளவனும், ஆச்சாமரத்தினடியில் இருப்பவனும், தர்ப்பையயானாலாகிய ரிஷிகளுக்குரிய ஆசனத்தில் உட்கார்ந்து இருப்பவனுமாகிய, கண்ணில்லாத த்யுமத்சேனரைக் கண்டான். அந்த அரசன் அந்த ராஜரிஷிக்குத் தகுந்த மரியாதையும், உபசாரங்களையும் செய்து, தான் யார் என்பதை வணக்கமுடன் தெரிவித்துக்கொண்டான். அந்த த்யுமத்சேனனும் தர்மங்களை நன்கு அறிந்தவன் ஆனதால், அஸ்வபதிக்கு அர்க்யம் கொடுத்து, தகுந்த ஆஸனத்தில் அமரச்செய்து, வந்ததற்கு என்ன காரணம் என்று வினவினான்.

அரசன், தான் ஸத்யவானை உத்தேசித்து புறப்பட்டு வந்ததை வணக்கமுடன், தெளிவாக தெரிவிக்கலானான். ‘‘ராஜரிஷியே! இதோ என்னருகில் ஸாவித்ரீ எனும் என் பெண் இருக்கிறாள். மிகுந்த அழகுடையவள். இவளை உமது புதல்வன் ஸத்யவானுக்கு கொடுப்பதாக நிச்சயித்து வந்துள்ளேன். என் பெண்ணின் மனதும் அவ்வாறே உள்ளது. தர்மங்களை நன்கு அறிந்தவரே! நீர் இவளை உமக்கு மருமகளாக, நமக்குரிய முறைப்படி, முறையாக என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளும்’’ என்று விண்ணப்பித்தான்.

த்யுமத்ஸேனன், ‘‘நாங்கள் ராஜ்யத்தினின்று நழுவினவர்கள். இப்பொழுது வனவாஸத்தை அடைந்து, கடும் நியமத்துடன் தவம் செய்பவர்களாக இருக்கிறோம். உனது குமாரியோ துன்பப்படத்தகாதவள்.

ஸத்யவானை மணம் புரிந்து இந்த வனவாஸ துன்பத்தை எவ்வாறு ஸகிப்பாள்'' என்று கேட்டார். உடன் அஸ்வபதி, ''ராஜரிஷியே! ஸுகமும், துக்கமும் வந்து போகக் கூடியவையே. உண்டாகின்றனவும், அழிகின்றனவுமாகிய இந்த விஷயங்களை நானும், என் பெண்ணும் நன்கு அறிந்துள்ளமையால் எங்களைப் போன்றவர்களிடத்தில் இவ்வாறான வாக்யம் பொருந்தாது. நான் ஒரு நல்ல நிச்சயத்துடன் வந்திருக்கிறேன். தங்களுடன் ஸ்நேகத்தோடு நமஸ்கரிக்கும் எனது ஆசையை நீர் கெடுக்கலாகாது. எனது ஸம்பந்தத்திற்கு நீர் ஒத்தவர். ஆதலால், நீர் எனது அன்பை மறுக்கவேண்டாம். உமக்கும் நான் ஒத்தவன். ஆகவே விரைவில் என் பெண்ணை ஸத்யவானுக்கு மனைவியாயும், உமக்கு மருமகளாயும் ஏற்றுக்கொள்ளும் என்றான்.

த்யுமத்ஸேனன், ''முன்பாகவே இத்தகைய ஸம்பந்தம் என்னால் விரும்பப்பட்டிருக்கிறது. நான் இப்பொழுது ராஜ்யத்தை இழந்தவன். ஆதலால், இது குறித்து நான் ஆலோசித்தேன். நானும் விரும்பிய இத்தகைய அபிப்ராயம் இப்பொழுதே நிறைவேறட்டும். நீர் எனது விரும்பப்பட்ட அதிதியாய் உள்ளீர்'' என்று ஸந்தோஷத்துடன் கூறினார்.

பிறகு இரண்டு அரசர்களும், ப்ராஹ்மணர்களை தருவித்து முறைப்படி ஸத்யவானுக்கும், ஸாவித்ரிக்கும் விவாஹம் செய்வித்தார்கள். அஸ்வபதி இது குறித்து மிகுந்த மகிழ்ச்சியுற்று, பின்னர் விடைபெற்று தன் நாடு சென்றான். ஸத்யவானும் எல்லாக் குணங்களும் நிரம்பியவளாகிய ஸாவித்ரியை அடைந்து ஸந்தோஷமடைந்தான். ஸாவித்ரியும் தான் முன்னரே வரித்த ஸத்யவான் தனக்குக் கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைந்தாள். ஸாவித்ரீ, தனது தந்தை நகரத்திற்கு சென்ற பிறகு, எல்லா ஆபரணங்களையும் கழற்றி வைத்துவிட்டு, மரவுரிகளையும் காஷாய வஸ்த்ரங்களையுமே தரித்துக்கொண்டாள்.

பணிவிடைகளாலும், குணங்களாலும், ஸ்நேஹத்தாலும், அடக்கத்தாலும், அனைவருக்கும் வேண்டியவற்றை செய்வதாலும் எல்லோருக்கும் ஸாவித்ரி மகிழ்ச்சியைக் கொடுத்தாள். வஸ்திரம் முதலிய ஶரீரத்திற்கு செய்யும் உபசாரங்களினால் தனது மாமியாரையும், தெய்வத்தைப் பூஜிப்பது போல் பூஜ்யதா **பா**வத்துடன் இருப்பதினாலும், வாக்கினுடைய அடக்கத்தாலும் மாமனாரையும், இன்சொல்லாலும், காரியத் திறமையாலும், அடக்கத்தாலும், தனது அன்பினாலும், தனது கணவனையும் அவள் ஸந்தோஷிக்கச் செய்தாள். இவ்வண்ணமே, அவர்களுக்கு தவம் செய்துகொண்டே சில காலம் சென்றது.

ஸாவித்ரிக்கு நாரதர் தன் கணவனைப் பற்றி சொல்லியிருந்த

வாக்யம் ஞாபகத்திலேயே இருந்தது. ஸத்யவானை அடைந்ததால் ஸந்தோஷமடைந்தாலும், தனது கணவனின் ஆயுட்காலம் குறுகிக் கொண்டே வருவதை மனதில் நினைத்துக் கொண்டே இருந்தாள்.

ஒரு வருடகாலம் முடியும் தறுவாயில், ஸாவித்ரியானவள், நான்காவது நாள் பர்த்தா மரிக்கும் நாளென்று நன்கு ஆலோசித்து, மூன்று நாட்களில் நிறைவேற்றத்தக்க ஒரு விரதத்தை அனுஷ்டிப்பதற்கு உத்தேசம் செய்தாள். அதற்காக, இரவும் பகலும் நியமமாய் இருந்தாள். அந்த விரதம் த்ரயோதசியில் ஆரம்பமாகி ப்ரதமையில் முடியும். திரயோதசியில் ஆரம்பித்து மூன்று நாட்களுக்கு உபவாஸம். பிரதமை அன்று பாரணை. இந்த விரதத்தினால் பர்த்தாவின் ஆயுள்விருத்தி அடைகிறது.

அந்த ஸாவித்ரியின் இத்தகைய விரதத்தை அறிந்து, த்யுமத்ஸேனர் மிகவும் மனவருத்தமுள்ளவனாகி, ஸாவித்ரியை நோக்கி, ''ராஜபுத்ரி! உன்னால் மிக்க கடுமையான இக்காரியம் தொடங்கப்பட்டு உள்ளது. மூன்று நாட்கள் போஜனமில்லாமலிருப்பது என்பது ஒருவராலும் அனுஷ்டிக்க முடியாதது ஆயிற்றே'' என்றான். ஸாவித்ரி, ''பிதாவே! தாங்கள் வருந்த வேண்டாம். இது விடாமுயற்சியினால் செய்யப்பட்டதாகையினால், நான் விரதத்தை நிச்சயம் முடிப்பேன்'' என்றாள். ''நான் உன்னை விரதத்தை விட்டுவிடு என்று எவ்விதத்தாலும் சொல்ல சக்தி உள்ளவனல்ல. என்னைப் போன்றவன், நன்கு விரதத்தை அனுஷ்டித்து முடிவு செய் எனக் கூற வேண்டும்'' என பெருந்தன்மையுடன் கூறினான் த்யுமத்ஸேனன்.

பர்த்தாவின் மரணம், நாளை நேர்வதாக இருக்கையில், ஸாவித்ரியின் முந்தைய நாள் இரவு மிகவும் துக்ககரமாக கழிந்தது. மறுநாள், அவள் சுத்தமாக ஸ்நானம் செய்து, ''நாரதர் குறிப்பிட்ட தினம் இன்றைய தினமே என்று நன்கு நிச்சயித்து, அக்னியில் ஹோமம் செய்து ஸூர்யன் உதித்து நான்கு முழம் மேலே வந்தவுடன், விரதத்தை முடிவித்து, எல்லாப் ப்ராஹ்மணர்களையும், வயது முதிர்ந்தோரையும், மாமனார், மாமியாரையும், நமஸ்கரித்து நியமத்துடன் இருந்தாள். தபோவனத்தில் இருக்கும் தபஸ்விகள் அனைவரும் மிக்க மங்களகரமான ஆசீர்வாதங்களை ஸாவித்திரிக்கு செய்தார்கள். மிக்க தவமுள்ளவளான ஸாவித்திரியும் கூட, ''இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம் இவ்வண்ணமே, ஆகட்டும்'' என்று மனதினால் ஏற்றுக்கொண்டாள்.

(தொடரும்)


# பாலகர்களுக்கு ஒரு கதை - 28

## நரஹரிஸோனார்

பண்டரீபுரத்தில் நரஹரிஸோனார் என்ற பரம ஶிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் தீவிரமான ஶிவபக்தர். பண்டரீபுரத்தில் வஸித்தும், அவர் ஒரு தரம் கூட பண்டரீநாதனுடைய கோவிலுக்கு சென்றதில்லை. ஶிவனைத் தவிர வேறு ஸ்வாமியை தரிசிக்கலாகாது என்பது அவரது கொள்கை. பண்டரீபுரத்திலோ, எங்கும் எப்பொழுதும் நாமஸங்கீர்த்தனமே முழங்கும். அது தன்னுடைய காதுகளில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காக காதுகளின் ஸமீபத்தில் இரண்டு பெரிய மணியை கட்டிக்கொண்டு இருப்பார். யாராவது ஹரி என்று சொல்வதாகத் தெரிந்தால் போதும், அது தன் காதுகளில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காக காதுகளில் கட்டியுள்ள மணியை அசைத்து, அதன் ஶப்தத்தினால் ஹரிஶப்தம் காதில் விழாதபடி பார்த்துக் கொள்வார்.

அந்த பண்டரீபுரத்திலேயே ஒரு பாழடைந்த ஶிவாலயம் இருந்தது. நித்யம் அங்கு சென்று அபிஷேகம், பூஜைகள், நிவேதனம் எல்லாம் செய்துவருவார். இந்த பண்டரீபுரத்தில் தன்னுடைய ஸ்வாமியான ஶிவனை லக்ஷ்யம் செய்வார் யாரும் இல்லையே என்று மிகவும் தாபப்படுவார். பாழடைந்த கோவிலைக்கண்டு மிகவும் வருத்தப்பட்டு அழுவார். நகைத்தொழில் செய்வதில் மிகவும் ஸமர்த்தர் அவர்.

ஒரு ஸமயம், மிகப் பெரிய தனவந்தர் ஒருவருக்கு குழந்தை பாக்யம் இல்லை. தனக்கு குழந்தை பிறந்தால் பாண்டுரங்கனுக்கு தங்கக் கவசம் செய்து ஸாத்துவதாக நேர்ந்துகொண்டார். அவருடைய வேண்டுதல் பலித்துவிட்டதால் அவர் ப்ரார்த்தனை செய்துகொண்டபடி தங்கக்கவசம் ஸமர்ப்பிக்க நல்ல தரமான முறையில் பொன் வேலைகள் செய்பவர் யார் என்று விசாரிக்கலானார். எல்லோரும் நரஹரி ஸோனாரையே பரிந்துரை செய்ய, இதன் பொருட்டு அவரை அணுகினார். ஆனால், நரஹரிஸோனாரோ, ஒருகாலும் தான் விஷ்ணுவான பாண்டுரங்கனுக்கு நகை செய்வதற்கில்லை என்று கூறிவிட்டார். அந்த தனிகரோ, தாங்கள் கோவிலுக்கு வரவேண்டாம். நான் அளவு எடுத்துக் கொண்டு வருகின்றேன். அதன்படி தாங்கள் செய்து



தாருங்கள். நீங்கள் இதைச் செய்து கொடுத்தால், தங்களுடைய, சிவ ஆலயத்தை நான் சீரமைத்து கும்பாபிஷேகம் செய்து வைக்கின்றேன் என்று வாக்குறுதி தந்தார்.

நரஹரி ஸோனாரும் அந்த ஒரு காரணத்திற்காக நகை செய்வதை ஏற்றுக்கொண்டு, அவர் எடுத்துக் கொடுத்த அளவுப்படி கனகச்சிதமாகச் செய்து கொடுத்தார். ஆனால், பாண்டுரங்கனுக்கு கொண்டு ஸமர்ப்பிக்கையிலோ மிகவும் சிறியதாக ஆகிவிட்டது. மீண்டும் ஒரு முறை அளவு எடுக்கப்பட்டு கவசம் செய்து ஸமர்ப்பிக்கப்பட்டது. இந்த முறை அளவு மிகவும் பெரியதாகிவிட்டது. கோவிலில் பூஜை செய்யும் பண்டாக்களோ, இந்த முறை, அந்த பொற்கொல்லரே நேரில் வந்துதான் அளவு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டனர்.

நரஹரிஸோனாரோ, பிடிவாதமாக கோவிலுக்கு வர மறுத்து விட்டார். அவரை ஒரு வழியாக ஸமாதானப்படுத்தினார்கள். அதற்கு அவர், ஒருக்காலும் என் கால் பண்டரிநாதன் ஆலயத்தை மிதிக்கக்கூடாது. ஒருக்காலும் இந்த நேத்திரங்களினால் பாண்டுரங்கனையும் நான் பார்க்க மாட்டேன் என்று கூறிவிட்டார். அவருடைய கண்களை கறுப்பு துணியால் இறுகக் கட்டி இரண்டுபேர் அவரை டோலியில் வைத்து பாண்டுரங்கனுடைய ஸமீபத்தில் அழைத்துச் சென்றனர். பிறகு அவர் தன் கைகளினால் தடவிப் பார்த்து அளவு எடுத்துக்கொள்ள வேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி அவரை பாண்டுரங்கனுடைய ஸமீபத்திற்கு அழைத்துச் சென்றனர். அவர் கைகளால் பாண்டுரங்கனை முதலில் தடவிப் பார்க்க ஆரம்பித்தால், முதலில் சிரஸில் கைவைத்த அவருக்கு ஜடாமுடியும், கங்கை ப்ரவாஹமும், பிறைச்சந்திரன் ஸ்பர்ஶமும் ஏற்பட்டது. ஆஹா! இது நாம் ஆராதிக்கக்கூடிய சிவபெருமான் அல்லவா என்று கண்களை அவசரமாக அவிழ்த்துப் பார்த்தார்.

பார்த்தால் மாயாவியான பாண்டுரங்கன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு அவரைப் பார்த்து மந்தஹாஸம் செய்தான். வேகமாகக் கண்களைக் கட்டிக் கொண்டு பிறகு வக்ஷஸ்தலத்தைத் தடவிப் பார்த்தால் ருத்ராக்ஷ மாலைகளும், கபால மாலைகளும் தென்பட, மீண்டும் கண்களைத் திறந்து பார்த்தால் அதே பாண்டுரங்கன். மீண்டும் மீண்டும் இப்படியே நடக்க, அன்றிலிருந்து ஸாக்ஷாத் ஹரிதான் ஸர்வ வ்யாபகமாகவும் உள்ளான் என்ற ஞானத்தை அடைந்தார் நரஹரிஸோனார்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 55

*சித்தம் குளிரக்கதி ரத்தம் வைத்து உன்*
*அமுதவாயை திற அருண்மதி அருணாசலா*

நீங்கள் எனக்கு என் மனது குளிரும்படி அனுக்ரஹம் செய்யுங்கள் என்று வேண்டுவதுண்டு. 'சித்தம் குளிர' என்றால் மனம் குளிரும்படி என்று அர்த்தம். 'கதி ரத்தம் வைத்து' - என்பதை 'கதிர் அஸ்தம் வைத்து' - என்று கொள்ளவேண்டும். அஸ்தம் என்பது ஹஸ்தம். 'ஹஸ்தம் வைத்து உன் அமுத வாயைத் திற அருண்மதி அருணாசலா' என்று ஹஸ்த தீக்ஷையை கேட்கிறார். மஹாத்மாக்களின் ஸ்பர்ஶம், பேச்சு, ஸங்கம் ஆகியவை அனைத்துமே அனுக்ரஹம்தான். அவை அனைத்துமே ஒரு மனிதனை பவித்ரமாக்கிவிடும். ஒரு ஜீவன்முக்தரின் ஸன்னிதானத்திற்கு ஸாதாரணமாக சென்று வந்துகொண்டிருந்தால் கூட, நமது வாஸனைகள் நம்மையும் அறியாமல் அழிந்துவிடும். இதற்குப் பல ப்ரமாணங்களைக் கூறலாம்.

ஒரு காட்டின் நடுவில் ஒரு சந்தன மரம் இருக்கிறது. அதைச் சுற்றி பல வகையான மரங்கள் இருக்கின்றன. சந்தன மரத்தின் மேலிருந்து மட்டுமல்லாமல், மீதி அதைச் சுற்றி உள்ள அனைத்து மரங்களிலிருந்தும் கூட சந்தன வாஸனை வரும். காரணம், அந்த சந்தன மரத்திலிருந்து வெளிப்படும் மணம் ஏனைய விருக்ஷங்களில் பட்டு அவைகளிலிருந்தும் அந்த மணம் வருமாம். அதுபோல் ஒரு உயர்ந்த ஜீவன்முக்தரை எந்தவித காரணமும் இல்லாமல் தரிசனம் பண்ணிக்கொண்டு வருபவனுக்கும், அவனையுமறியாமல் அவனுடைய வாஸனைகள் அவனை விட்டு விலகிப் போகும்.

குஷ்டரோகிகள் இருக்கும் இடத்திற்கு ஒருவன் போய் வந்து கொண்டு இருப்பானேயாகில், இவனுக்கும் அந்த குஷ்டரோகம் நாளடைவில் வந்துவிடும். குஷ்டரோகியிடமிருந்து இவனுக்கு நோய் தொத்திவிடுகிறது. இவன் ஆசைப்படாவிட்டாலும் அந்த நோய் வரும். அதுபோல் நாம் மஹாத்மாக்களை தர்சனம் செய்யும்பொழுது, நாம் ஆசைப்பட்டாலும், ஆசைப்படாவிட்டாலும் நம்முள் அவருடைய பார்வையினாலேயே, ஞான, வைராக்யங்கள் ஏற்பட்டுவிடும்.

குருவானவர் ஒருவருக்கு எப்படி வேண்டுமானாலும் அனுக்ரஹம் செய்யலாம். ஒரு சிஷ்யனை ஸ்மரிப்பதனால் மட்டுமே கூட அவனுக்கு பூரண அனுக்ரஹம் செய்யலாம். இதற்கு ப்ரமாணமாய் ஆதிஶங்கரர் சரித்திரத்தில் வரும் கிரி எனும் தோடகாச்சாரியாரை சொல்லலாம். பார்வையினால் குரு சிஷ்யனை கடாக்ஷிக்கலாம். தனது ஸ்பரிசத்தினாலும் அனுக்ரஹிக்கலாம். இங்கு ஸ்பர்ஶ தீக்ஷையையே கேட்கிறார்.

நமக்கு மனது உண்டு. வாஸனைகள் உண்டு. நமது இந்திரியங்கள் மனம் வசப்பட்டு இருப்பதால் நமக்கு ஶரீரம், மனம், இரண்டும் கட்டுப்படாது. ஆனால் மஹாத்மாக்களுக்கு மனது என்பது கிடையாது. அவர்களுக்கு வாஸனையும் கிடையாது. அவர்களது வாக்கு, பார்வை, ஸ்பர்ஶம் இவை அனைத்தின் மூலம் வெளிப்படுவதும் ப்ரஹ்மம்தான். நாம் நமது ஶரீரத்தையே நாம் என்று பார்க்கிறோம். ஆனால் மஹாத்மாக்களோ ஆத்மாவையே தாங்களாக பாவிக்கிறார்கள். ஆதலால் அவர்களிடம் வெளிப்படுவது ஆத்மசைதன்யம்தான். ப்ரஹ்மம்தான். அதனால், அவர்கள் ஒரு அனுக்ரஹம் செய்தால் நமது மனதும் அடங்கிவிடும். நமது வாஸனைகளும் அகலும்.

ஒரு ஸமயம், ஸ்வாமி விவேகானந்தர் த்யானம் செய்து கொண்டிருக்கும் வேளையில் அவருக்கு பலவிதமான காட்சிகளும், அனுபவங்களும் ஏற்பட்டது. அவருக்கு அக்காலத்தில் தன்னிடம் பிறருக்கு அனுக்ரஹம் வழங்கும் சக்தி இருப்பதை உணர்ந்தார். அக்காலத்தில், அங்கு அவர் போவோர், வருவோர்களை எல்லாம் தட்டிவிட்டு போனார். அப்படி அவர் செய்ததினால், அவர் தொட்டவர்களுக்கெல்லாம் எதில் ஆசை இருந்ததோ, அது விருத்தியானது. பக்தி செய்யவேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்தவருக்கு அது பலமடங்கு விருத்தியானது. லௌகீக எண்ணம் கொண்டிருந்தவருக்கு, அதுவும் மேலே வளர்ந்தது. இதன் பின்னர் ஸ்வாமிஜி, ராமகிருஷ்ணரை பார்க்கச் சென்றபொழுது, ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தருக்கு, ''நீ நிறைய ஸம்பாதிப்பதற்கு முன் செலவு செய்யாதே'' என்று உபதேசம் செய்தார். ஆக, ஹஸ்த தீக்ஷையினால் பலன் உண்டு.

ராமக்கிருஷ்ணபரமஹம்ஸரைத் தேடிக்கொண்டு நிறைய இளைஞர்கள் வருவர். அப்படி வருகிறவர்களும், ராமக்ருஷ்ணரும் சேர்ந்து நாமகீர்த்தனம் செய்வர். தினமும் இதுபோல் நடந்துகொண்டு இருக்கும். இவ்வாறு வருபவர்களின் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு,

சிலருக்கு இது பிடிக்காது. அவர்கள் இவர்களைத் தடுத்துவிடுவர். இதனால் சிலர் வருவது திடீரென்று நின்றுபோகும். சில நாட்கள் கழித்து அந்த இளைஞர் மீண்டும் வருவார். ஏன் சில நாட்களாக வரவில்லை? என்று ராமக்ருஷ்ணபரமஹம்ஸர் அவரைக் கேட்பார். அதற்கு அவர், ''வீட்டில் திட்டுகிறார்கள், பயப்படுகிறார்கள்'' என்பார். உடனே குருமஹராஜ் சொல்வார், ''நீ எப்படியாவது அவர்களை இங்கு ஒரு முறை அழைத்துக்கொண்டு வந்து விடு. நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்பார். அவரும் ஒரு முறை தனது வீட்டில் உள்ளோரை அழைத்து வருவார். அங்ஙனம் வந்தவுடன், புதிதாக வந்தவரை பரமஹம்ஸர் அடிக்கடி தொட்டுத் தொட்டுப் பேசுவார். இங்ஙனம் அவர் தொட்டுத் தொட்டுப் பேசுவதால் வந்தவருடைய வாஸனை கொஞ்சம் அகன்றுவிடும். சிறிது நாளில் அவரும் இவருடைய பக்தராகிவிடுவார். இதுவும் ஸ்பர்ஶ தீக்ஷையே.

பகவான் ரமணருக்கு, மஹர்ஷி என்ற பெயர் ஏற்பட்டதற்கு 'காவ்யகண்ட கணபதிமுனி' என்பவர்தான் காரணம். இவர் காசியில் உள்ள துண்டி கணபதியின் அவதாரம். கணபதியின் அம்ஶம். ஸ்வயம் கணபதி. அவர் ஜபம் செய்துவிட்டு வெளியில் வந்து நின்றார் என்றால் மழை பெய்யும். கடும் தபஸ்வி. ஆசு கவி. ஸ்லோகங்களை பொழியக்கூடியவர். அதனாலேயே அவருக்கு 'காவ்யகண்ட கணபதிமுனி' என்ற பெயர் ஏற்பட்டது. எந்த ஸித்தாந்தத்தையும் எப்படி வேண்டுமானாலும் வாதம் செய்து ஜெயிக்கக்கூடியவர். மந்திரமிலேஶ்வரர். அவர் ஏதாவது ஒரு சாபம் கொடுத்தார் என்றால் அப்படியே பலித்துவிடும். எந்த ஊர் மேலாவது இவருக்கு கோபம் வந்துவிட்டால், 'தேர் மேல் இடிவிழ' என்று சொல்லிவிடுவார். அப்படியே நடந்து, தேர் பற்றி எரியும்.

நாசிக் என்ற நகரம் மஹாராஷ்டிரத்தில் உள்ளது. இங்கு ஒரு கபாலீஶ்வரர் கோயில் உள்ளது. ஒரு ஸமயம், அங்கு இவர் தியானம் பண்ணிக்கொண்டு இருந்தார். யாரோ சில விஷமிகள் வந்து இவரை அடித்துவிட்டார்கள். இவருக்கு வந்த கோபத்தில் இந்த நாசிக் நகரமே அழிந்துபோகட்டும் என்று சாபமிட்டார். பின்னர் அந்த ஊர் முழுக்க பிளேக் (plague) நோய் வந்து பலர் இறந்து போயினர். இப்பேர்ப்பட்ட கணபதி முனிவர் பகவானிடம் வந்து இருக்கிறார். இவருக்கு மேலே முன்னேற மார்க்கம் காண்பித்தவர் பகவான். 'மார்க்கதரிசி, மஹரிஷி, என்று இவர் பெயர் கொடுத்தார் பகவானுக்கு. இந்த காவ்யகண்ட கணபதிமுனிவருக்கு பகவான் அனுக்ரஹம் செய்த ஆச்சரியமான ஸம்பவம் உள்ளது.

சென்னைக்கு அருகில் உள்ள திருவொற்றியூரில் உள்ள ஒரு கோயிலில் கணபதி ஸன்னதி வாசலிலேயே இருக்கும். அந்த ஸன்னதியில் கணபதிமுனிவர் உட்கார்த்து தியானம் செய்துகொண்டு இருந்தார். இவருடைய தவம் முழுவதும் ரமண மஹரிஷிகளையே நோக்கி இருந்தது. இவருடைய தபஸினால் ஆகர்ஷிக்கப்பட்ட திருவண்ணாமலையில் இருந்த பகவான் ரமணர், திருவொற்றியூர் சென்றார். இதை அவரே தன் வாக்கால் சொல்லி இருக்கிறார்.

தான் திருவொற்றியூர் சென்றதைக் குறித்து ரமணர், ''ஸித்த புருஷர்கள் எல்லாம் இதுபோல்தான் ஸஞ்சாரம் செய்வார்கள் போலிருக்கிறது. ஶரீரத்தை விட்டு நான் இங்கிருந்து கிளம்பி, திருவொற்றியூர் என்ற ஊருக்குச் சென்று, அங்குள்ள ரஸ்தாவில் இறங்கி நடந்தேன். காவ்யகண்ட கணபதிமுனிவர் தபஸ் செய்துகொண்டிருந்த கோவிலுக்குச் சென்றேன். என்னுடைய ஹஸ்தத்தை எடுத்து அவர் தலையில் வைத்து, ஹஸ்த தீக்ஷை கொடுத்தேன்'' என்கிறார். அதன் பின், காவ்யகண்ட கணபதிமுனிவருக்கு தியானத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. அஸ்த தீக்ஷை ரமணரே கொடுத்துள்ளார் என்பதற்கு இதுவும் ஒரு ப்ரமாணம்.

பகவான் ரமணர், தனது தாயாரின் இறுதிக் காலத்தில் அவர் அருகிலேயே இருந்து அவருக்கு மோக்ஷம் கொடுத்தார். அப்பொழுது அவர் என்ன செய்தார் என்றால், தாயாரின் சிரஸில் தனது ஒரு கையையும், மற்றொரு கையை தாயாரின் ஹ்ருதயத்திலும் (மருத்துவர்கள் கூறும் ஹிருதயமல்ல இது. அது இடதுபுறம் உள்ளது. நாம் கூறும் ஹ்ருதயம் வலப்புறம் உள்ளது) வைத்தார். 'ஹ்ருத்' 'இயம்' என்பதே ஹ்ருதயம். இதுதான் மையம் என்று அர்த்தம். இந்த ஹ்ருதயத்தில் கையை வைத்து, தாயாரின் சிரஸில் கிளம்பும் வாஸனைகளை எல்லாம் ஒடுக்கி, அவளை மோக்ஷத்தில் கொண்டுபோய் சேர்க்கிறார். தன்னுடைய இரண்டு கைகளையும் தாயாரின் ஶரீரத்தில் வைத்து மோக்ஷம் கொடுக்கிறார். இதுவும் ஹஸ்த தீக்ஷை.

'பழனிசாமி' என்ற தனது பக்தரின் விஷயத்தில் இதே போல் அவர் அனுக்ரஹம் செய்யும்பொழுது, எல்லா வாஸனைகளும் அழிந்துவிட்டதாக எண்ணிக் கையை எடுத்துவிட்டார். அவரே இதைச் சொல்லும்பொழுது,'' ''ஒரு மணி சப்தம் கேட்டதும். நான் கையை எடுத்துவிட்டேன். அவன் வாஸனைகள் அனைத்தும் அழித்துவிட நினைத்தேன். ஆனால் அங்ஙனம் இல்லை. ஆயினும் பழனிசாமி ஒரு நல்ல கதியை அடைந்தான். அதுபோல் என் தாயாரின் விஷயத்தில்

ஏமாறலாகாது என்று, மணிசப்தம் கேட்டபின்னும் நான் கை வைத்துக் கொண்டிருந்தேன்'' என்கிறார். இதுபோல்தான் பசு மாடான லக்ஷ்மிக்கும் மோக்ஷம் கொடுத்தார்.

''கதி அஸ்தம் வைத்து உன் அமுத வாயைத் திற அருண்மதி அருணாசலா'' நான் ஸந்தோஷப்படும்படியாக இந்த தீக்ஷையை எனக்குக் கொடுத்து எனது வாசனைகளை போக்கக் கூடாதா என்கிறார் பகவான்.

(தொடரும்)

## *செய்திகள்*

பிப்ரவரி 19-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை ஆதம்பாக்கம், நிலமங்கை நகர், ஸ்ரீ ஶங்கர கேந்திரத்தில், ஆதம்பாக்கம் கைங்கர்ய ஸபை ஸார்பில், ஸ்ரீ ஸ்வாமிகள், பக்தவிஜயம் பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**மார்ச் 23-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை ஸ்ரீ ப்ருந்தாவனத்தில், ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ ஸதக்ரது யஜ்ஞம் ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற இருக்கின்றது.**

**ஏப்ரல் 9-ந் தேதி சீர்காழி அருகிலுள்ள திருநாங்கூரில் திருதெற்றியம்பலம் செங்கமலவல்லித் தாயார் ஸமேத ஸ்ரீ பள்ளிகொண்ட ரங்கநாத பெருமாள் கோவில் ஸம்ப்ரோஷணத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.**

எல்லா வேலைகளையும் அப்பால் போட்டுவிட்டு சாயங்கால வேளைகளில் நீ பகவத்தியானம் செய்யவேண்டும். அஸ்தமனகாலந்தான் ஈசுவர ஞாபகம் தானாகவே வரும் தருணம். சற்று முன்னால் உலகப் பொருள்கள் எல்லாம் கட்புலனாயின. இப்போது அவைகள் அந்தகாரத்தில் மறைந்து கிடக்கின்றன. இப்படிச் செய்தவன் யாவன்? என்ற இவைபோன்ற சிந்தனைகள் அப்போது உண்டாகின்றன. ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்

**மங்களானி பவந்து**

